**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.43** **நாள்: 13.04.2024**

**சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட மறுபயிற்சி வகுப்புகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, மத்திய, மாநில அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கள் வாக்குச்சாவடி அலுவலர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முதற்கட்டப் பயிற்சி வகுப்பு 24.03.2024 அன்றும், இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பு 07.04.2024 அன்றும் சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 16 மையங்களில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, இரண்டாம் கட்ட மறுபயிற்சி வகுப்பு இன்று (13.04.2024) நடைபெற்றது.

இதில் விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீனாட்சி பொறியியல் கல்லூரி, தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அசோக் நகர் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நந்தனம் அரசு ஆண்கள் கலைக்கல்லூரி ஆகியவற்றில் நடைபெற்ற வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட மறுபயிற்சி வகுப்பினையும், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான தபால் வாக்குகள் பதிவு செய்யும் மையத்தினையும் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு அலுவலர்களுக்கு தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கான அறிவுரைகளை வழங்கினார்.

முன்னதாக, மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் சென்னை லயோலா கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**